

# தமிழ் இசை

டாக்டர் நா. மகாலிங்கம்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் தோன்றினான். படிப்படியாகப் பல முன்னேற்றங்களை அடைந்தான். நாகரிகம் அடையாமல் குகைகளில் அவன் வாழ்ந்த காலத்திலேயே கரித் துண்டுகளினால் பாறைகளில் வரையத் தொடங்கினான். தன் உணர்ச்சிகளை சைகைகள் மூலம் காட்டினான்; பின்னர் பேசினான்; அதற்குப் பின் பாடினான்.

நுண்கலைகளின் நுட்பத்திலும் அவற்றைப் பயன்படுத்துவதிலும் பண்டைக் காலத் தமிழர் தலைசிறந்து விளங்கினர். இசை பயிற்றுவிக்கப்பட்டது. இனிய இசையைத் தமிழர் விரும்பினர். தாலாட்டுப் பாடும் பொழுது குழந்தை தூங்குகிறது. பக்திப் பாட்டினால் நெஞ்சம் உருகுகிறது. இலங்கை மன்னன் இராவணனின் இசை பாறைகளை உருகச் செய்தது. சில பண்ணுக்கு மழை பெய்கிறது. மற்றொரு பண்ணுக்கு பாம்பு படம் எடுத்து ஆடுகிறது. அதுதான் இசையின் ஆற்றல்.

தமிழர் வழிபடும் தெய்வங்களின் உருவங்களில் இசையின் தாக்கத்தைக் காணலாம். கலைமகள் வீணையுடன் காட்சி அளிக்கிறாள். நந்தியை மத்தளத்துடன் காண்கிறோம். கிருஷ்ணனுக்கு உரிய இசைக் கருவி புல்லாங்குழல். நாட்டியக் கோலத்தில் நடராஜர். தேவார திருவாசகங்களிலும் திவ்ய பிரபந்தங்களிலும் கீர்த்தனைகளிலும் இசையைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே கிடைக்கின்றன.

இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்

— மணிவாசகர்

மண்ணார்ந்தன அருவித் திரள் மழலை முழவு அதிரும்
அண்ணா மலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே

கொட்டும் பறை சீரால் குழும அனலேந்தி
நட்டம் பயின்றாடும் நல்லூர்ப் பெருமானை

கழலின் ஓசை சிலம்பின் ஒலிஓசை கலிக்கப் பயில் கானில்
குழலின் ஓசை குறட் பாரிடம் போற்றக் குனித்தார் இடம் என்பர்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி

— திருஞானசம்பந்தர்

குழலோடு கொக்கரைக் கைத்தாளம் மொந்தை
குறட்பூத முன்பாடத் தான் ஆடும்மே

— திருநாவுக்கரச

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கு இரங்கும்

— சுந்தரர்

இவ்வாருகப் பல குறிப்புகள் இருக்கின்றன.

இயற்கையின் ஓசையை கூர்ந்து கவனித்தோமானல், 'ஓம்' என்ற பிரணவத்தின் எதிரொலிப்பைக் கேட்கலாம் என்று சமயச் சான்ரோர்கள் மாத்திரமல்லாமல், விஞ்ஞானிகளும் முடிவு செய்துள்ளனர். தொடர்ந்து கேட்கும் கோயில் மணி ஓசை இசை மயமாகிறது. சில இசைக் கருவிகள் இசைக்கப்படும் பொழுது, பயிர்கள் வளருகின்றன என்றும் சில கருவிகளின் இசை மனித உடம்பை இதமாக்குகின்றன என்பதும் இன்றைய விஞ்ஞானிகளின் முடிவு.

ஆகவே தொன்றுதொட்டு இன்று வரை மனித உள்ளத்தைப் பயன்படுத்தி வருகிறது இசை என்பதில் ஐயமில்லை. எப்பொழுது இசை தோன்றியது என்பதைத் திட்டவட்டமாகத் தீர்மானிப்பது கடினம் என்ருலும், நமக்குக் கிடைத்துள்ள குறிப்புகளிலிருந்து தொல்காப்பியம் தோன்றிய காலத்திற்கு முன்னமே தமிழ் இசை இருந்தது என்று அறிந்து கொள்கிரேம். தொல்காப்பியமோ பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என்று அறிஞர் பெருமக்கள் தகுந்த ஆய்வின் பின்னர் முடிவு செய்திருக்கின்றனர். ஆகவே தமிழ் இசை தோன்றி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது என்றும் முடிவு செய்துள்ளார்கள்.

"அளபு இறந்துஉயிர்த்தலும் ஒற்றிசை நீட்டலும்
உளது என மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனர் புலவர்"

என்பது தொல்காப்பியத்தில் வரும் குறிப்பு.

உயிர் எழுத்துக்கள் எல்லாம் தமக்கென உள்ள அளவைக் கடந்து ஒலித்தலையும் ஒற்றெழுத்துகள் ஒலி நீண்டு ஒலித்தலையும், குரல் முதலிய ஏழு இசைகளோடு பொருந்திய நரம்பினையுடைய யாழினிது இசை நூற்கண்ணே கூறப்பட்டுள்ளன என்று சொல்லுவர் என்பது இதன் கருத்து. இதில் 'மொழிப' என்ற சொல்லைக் கவனித்தல் வேண்டும். 'மொழிப' என்று ஆசிரியர் குறிப்பிடும்பொழுது அவருக்கு முந்திய காலத்து நூலாசிரியர்களும் இப்படிக் கூறியுள்ளார்கள் என்பது கருத்து. ஆகவே தொல்காப்பியத்துக்கு முந்தைய காலத்திலிருந்தே தமிழ் இசைக்கு இலக்கணம் இருந்தது என்பதைக் காண்கிரேம். எப்பொழுதுமே இலக்கியம் தோன்றிய பின்னரே இலக்கணம் தோன்றுமாதலின், தமிழ் இசை இலக்கியம் தொல்காப்பிய காலத்திற்கு பல்லாண்டுகளுக்கு முன்னமே தோன்றியிருக்க வேண்டும்.

இதனேடு ஒப்பிட்டுப் பார்த்தால், தேவார மூவர் தோன்றிய காலம் மிகச் சமீபமான காலம் என்று கூடச் சொல்லலாம். ஒரு சில நூற்ருண்டுகளுக்கு முன்னல் ஏழாம் எட்டாம் நூற்ருண்டுகளில் தோன்றியவர்கள் தேவார மூவர். அவர்களுக்கும் தொல்காப்பிய காலத்துக்கும்

இடைப்பட்ட காலத்தில் தமிழ் இசை என்ன ஆயிற்று என்ற கேள்வி எழலாம். சிலப்பதிகாரம், பஞ்ச மரபு ஆகியவை இசையைப் பற்றிய நுணுக்கங்களைக் கூறியதிலிருந்து, வழி வழியாக, ஆண்டாண்டாகக் காலங்காலமாகத் தமிழ் இசை தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது என்பதைக் காண்கிறோம்.

சிலப்பதிகாரத்தில் சொல்லப்பட்டவற்றை ஆராய்ந்தால், பண்டைக்கால இலக்கியங்களில் தமிழ் இசையைப் பற்றி விரிவான, நுணுக்கமான செய்திகள் இருந்ததை அறியலாம்.

"மன்னு மணிகள் மலர்தேடி மதுவை யுண்டு வரைதோறும்
பன்னு சார லவையெங்கும் பற்றி யார்க்கும் வகையேபோன்
முன்ன மோசை பலவாகி முழுதும் வேறாய் மிடறென்றாய்த்
தென்ன வென்னு மிசைவளர்த்துப் பண்ணு மாறு தேன்போல்"

தேனீக்கள் வெவ்வேறு வித மலர்களிலிருந்து தேனைச் சேகரிக்கும்பொழுது ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான சத்தத்தை உண்டு பண்ணுகிறது. அதேபோல பொருத்தமான ஸ்வரங்களைச் சஞ்சாரம் செய்யும் பொழுது இனிய இசை பிறக்கிறது. தேனீக்கள் ஒன்று சேர்ந்து சேர்த்த தேனைப் போன்றது இசை என்பது சிலப்பதிகாரக் கூற்று.

மேலும் மூச்சுக்கும் பாடலுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பைப் பற்றி கூறியிருப்பதைப் பார்ப்போம்.

"மிடறுமென்பது மூலாதாரந் தொடங்கிய மூச்சைக் காலாற்
கிளப்பிக் கருத்தாலியக்கி ஒன்றெனத் தாக்கி இரண்டெனப்
பகுத்துப் பண்ணீர்மைகளைப் பிறப்பிக்கப்பட்ட பாடலியலுக்
கமைந்த மிடற்று பாடலு மென்றவாறு"

இப்படியாகச் சிலப்பதிகாரம் ஒரு இசை நாட்டிய நூல் என்று எண்ணக்கூடிய அளவுக்கு தமிழ் இசையைப் பற்றிய குறிப்புகள் அதில் காணப்படுகின்றன.

கி. மு. 300 தொடக்கம் கி. பி. 600 வரையான காலத்தை எடுத்தால், அக்காலத்திய பாடல்களில், இசையும் இசைக் கருவிகளும் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. பாணர்கள் இசை வல்லுனர்கள். இவர்கள் பல இடங்களுக்குச் சென்று இசைத்து, மன்னர்களையும் மக்களையும் மகிழ்வித்தவர்கள் ஆயிரம் வருடங்களுக்குப் பின்னால் இவர்களின் வழித் தோன்றல்கள் என்று அழைக்கப்பட்டனர்.

கி. பி. 600 முதல் 1200 வரையுள்ள காலத்தைத் தேவர் மூவருடைய காலம் என்று சொல்லலாம். அப்பொழுது மதுரையும், பாண்டிய அரசும், அப்பொழுது இருந்த நுண்கலைகளும், தமிழ் இசையும் நசுக்கப்பட்டிருந்த காலம். அந்தக் காலத்தில் தோன்றியவர்கள் தேவார மூவரென்று பொதுவாக அழைக்கப்படும், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி ஆகிய நாயன்மார். இவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் ஆற்றிய தொண்டு மிகச் சிறப்புடையது. தமிழுக்கும் சைவத்திற்கும் மாத்திரமல்லாது, தமிழ் இசையின் மறுபிறப்பிற்கும் வித்திட்டார்கள்.

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி இவர்களுடைய காலம். சிறுபிள்ளையான சம்பந்தர் 16,000 பாடல்கள் பாடியதாக சொல்லப்பட்டுள்ளது. அவற்றில் ஏறக்குறைய 4.000 பாடல்கள்

மாத்திரமே இப்பொழுது நமது கைக்குக்கிட்டியிருக்கின்றன. பதினுறு ஆண்டுகள் மாத்திரமே இவ்வுலகில் வாழ்ந்த சம்பந்தர் பல பண்களைப் பாடல்களில் கையாண்டிருக்கிறுர். நமக்குக் கிடைத்துள்ள பாடல்களை மாத்திரம் பார்த்தால் 23 பண்களில் அவர் பாடியிருக்கிறுர் என்று தெரியவருகிறது. அது மாத்திரமல்ல ; அவருடைய பாடல்களில் பல இசைக் கருவிகளைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

திருநாவுக்கரசர் 81 ஆண்டுகள் வாழ்ந்ததினுல் போலும் அவர் பாடிய பாடல்கள் தான் மிக அதிகம். மொத்தம் 49.000 பாடல்களை அவர் பாடியதாகச் சொல்லப்படுகிறது. நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் குறைவாக இருந்த போதிலும், அவரும் 14 பண்களில் பாடியிருப்பதைக் காண்கிறேம். சம்பந்தர் பாடியிராத பணிகளிலும் திருநாவுக்கரசர் பாடியுள்ளார்.

சுந்தரமூர்த்தி நாயனுர் 38,000 பாடல்களைப் பாடினுர். அவற்றிலும், ஒரு சிலவே நமக்குக் கிடைத்துள்ளன. சம்பந்தரும் அப்பரும் கையாளாத பண்களை இவர் கையாண்டிருக்கிறுர்.

ஆகவே தேவார மூவர் காலத்தில் இசை மறுபடியும் ஓங்கி வளர்ந்திருக்கிறது. சொல்லப்போனுல் இந்த இசையே பின்னுல் வந்த, இப்பொழுது நடைமுறையில் இருக்கும் இசைக்கு அஸ்திவாரமாக அமைந்தது. 18ஆம் 19ஆம் நூற்ருண்டுகளில் வளர்ந்த இசைக்கும் இரண்டாம் மூன்ரும் நூற்ருண்டுகளில் வழக்கிலிருந்த இசைக்குமிடையே தேவார இசை ஒரு பாலமாக அமைந்திருப்பதைக் காண்கிறேம்.

இதேபோலத்தான் ஆழ்வார்கள் பாடி திவ்யப் பிரபந்தப் பாடல்களும் வழி வகுத்தன. மொத்தம் 4000 பாடல்கள் இருப்பதினுல், அவற்றை நாலாயிரத் திவ்யப் பிரபந்தம் என்று அழைக்கிறேம். அன்று நிலவிய பண்களில் ஆழ்வார்கள் பாடினுர்கள். அன்று தொட்டு இன்று வரை தேவாரப் பாடல்களும், திவ்யப் பிரபந்தப் பாடல்களும் திருவாசகப் பாடல்களும் நின்று நிலவி வருகின்றன. இவை தொடர்ந்து மக்களின் மனதைக் கவருவதற்குப் பெருமளவு தொண்டு செய்தவர்கள் ஓதுவார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன்னுல், பள்ளிப் பாடங்களில் ஒன்ருக சமயம் கற்பிக்கப்பட்டது. ஒரு மாணவன் இந்துவாக இருந்தாலும், கிறிஸ்தவனுனலும், அன்றி வேறு மதத்தைச் சார்ந்தவனுக இருந்தாலும், அந்தந்த மதங்களின் சிறப்புகள் அவனுக்கு சிறு வயதிலிருந்தே, ஆரம்ப பள்ளி நிலையிலிருந்தே சொல்லிக் கொடுக்கப்பட்டன. பாடத்திட்டத்தில் இது ஒரு பாடமாகக் கருதப்பட்டது. அப்பொழுதெல்லாம் பள்ளி துவங்கு முன்னர், இறைவனை வழிபட்டு, தேவாரங்களையோ, திவ்யப்பிரபந்தங்களையோ, அல்லது மத சமயத் தோத்திரங்களையோ மாணவர் பாடிய பின், பள்ளிப் படிப்பு தொடங்கியது. இதனுல் மதப் பற்று மாணவரிடையே வலுவடைந்ததோ இல்லையோ, இசையில் நாட்டம் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதில் ஐயமில்லை. ஏனே அந்தப் பழக்கத்தை இப்பொழுது கைவிட்டிருக்கிறேம்.

தாய் மொழிப் பற்றும், பண்பாட்டுப் பாதுகாப்பும் வளர்ச்சியும் நம் ஒவ்வொருவருடைய கடமை எனக் கொள்ளல் வேண்டும். இசைச் சங்கங்கள் இசையையும், நடனம், நாடகம்

என்னும் முத்தமிழையும் வளர்ப்பது மட்டுமல்லாது, கலைஞர்களை ஊக்குவித்து, ஆர்வமளித்து அவர்களுக்கு ஆதரவு அளித்து வளர்க்க வேண்டும். பொதுமக்களை கலா ரசிகர்களாகத் தூண்டி வளர்க்க வேண்டியது மிக அவசியம். இப்பொறுப்பு தமிழ் இசைச் சங்கம் போன்ற பொது நிலையங்களின் மேலான பொறுப்பெனலாம். நாம் எல்லோரும் நம் நாட்டின் குறைகளைத் தீர்த்துப் பெருமைகளைப் பாதுகாத்து வளர்க்க, அஞ்சாது, அயராது, உழைக்க முன்வர வேண்டும்.

மொழிப் பற்று, குறிப்பாக தாய்மொழிப் பற்றுக் கொண்ட பெரியோர் பலர், தாய் மொழிக் கல்விக்கு ஆதரவு கொடுத்து அம் முயற்சி செழித்தோங்க ஆர்வங் கொண்டு செயல்பட வேண்டும். திண்ணைப் பள்ளிக்கூடக் காலம் போல், இன்று இல்லை எனினும், தற்கால நவீன போதனை முறைகள் மூலம் சிறப்பாக வானொலி, தொலைக்காட்சி, திரைப்படங்கள் முதலான வற்றின் துணை கொண்டு சிறந்த முறையில் கல்வி, கலைகளைப் புகட்டும் காலம் இது. எனவே நல்ல முறைகளைக் கைக்கொண்டு சிறுவர் சிறுமியருக்குச் சிறந்த கல்வி புகட்டுவதே நம் தொண்டெனக் கொள்ளல் வேண்டும். யார் யார் பாடினாலும் தாய் மொழியாம் தேன் தமிழ் மொழியில் பாடுவது சிறப்பாகும். அதுவே குயில் தன் குரலாலேயே பாடுவதை ஒக்கும். அதுவே இயற்கை. அதுவே இன்பம் பயக்கும். நம்நாட்டுப் புலவர்களையும், பெரியோர்களையும். பாடலாசிரியர்களையும், ஞானசிரியர்களையும் நினைவு கூர்வது நன்று. பாரதியாரும், பாரதி தாசனும், இராமலிங்க சுவாமிகளும் இன்னும் பழம்பெரும் பக்தர்களும் விட்டுச் சென்ற பாடல்கள், படைப்புகள் நம் மக்கள் சொத்தன்றோ?

ரவீந்திரநாத் தாகூர் அவர்கள் ஸ்தாபித்த சாந்தி நிகேதனம், விஸ்வ பாரதி கல்விப் புல்கலைக் கழகங்கள், ஸ்ரீ நிகேதனம் போன்றவை நமக்கு முன் மாதிரி நிலையங்களாக, கல்வி, கலைக் கழகங்களாகத் திகழ்கின்றன. இயற்கை வனப்புக்கும், அமைதிக்கும் உரிய தனி இடங் களாக நாற்புறமும் சோலையும் இயற்கை அன்னையின் அன்பை அள்ளி அள்ளி அளிக்கும் பிரத்தியேக அமைதிக் கூடங்களாக தியான வழியிலும் மாணவரை வழிப்படுத்த அனுகூலமாக அமைந்த எளிமைக் கோயில்களாக. செம்மை நிறைந்த சூழல் கொண்ட நிலையங்களாக இயற்கையோடு ஒன்றி வாழ வாய்ப்பளித்த கல்வி, கலை நிறுவனங்களாக வாய்ப்பளித்த அச் சிறந்த கலைக் கோயில்களை நாம் இன்று புகழ்ந்து பாராட்டுகிறோம். இயற்கையின் அழகில் மூழ்கி மகிழ்ந்து மலர வேண்டும். அப்பொழுது தான் உண்மைக் கலையுணர்வு பெற முடியும். பள்ளிக்கூடம் சிறைக்கூடமாக அமைதல் ஆகாது. கண்மூடிப் பழக்கங்கள் இடம் பெற வாய்ப்பில்லை. பழக்க வழக்கம், ஒழுக்கம் எல்லாம் இயல்பாக சிறந்து அமைய வேண்டும். சித்திரமும், கலை உணர்வும் சிறுவரிடையே ஏற்படச் சுற்றுடல் சிறப்பாக அமைய வேண்டும். நதியும், ஓடையும், மரமும் சோலையும், பறவை குருவிகள் கூட்டமும், பண்ணையும் பயிரும் தென்றலும், வானும் முகில்களும் பரவசமூட்டும் உணர்வும் கலைகள் கல்வி ஆற்றலையும் இறைவன் படைப்பின் விநோதத்தையும் மாணவர் மனதில் தூய்மையையும் அழகு உணர்ச்சியையும் உணர்த்தும் என்னும் உண்மையை உணர்த்தும் ஸ்தாபனங்களாகிய அக்கலாக்ஷேத்திரங்களை நாம் நினைவு கொள்வோம்.

முற்கால மன்னர்கள் வளர்த்த கலைஞர்களாலேயே இந்நாடு சிறந்தது. அதி காலையிலேயே திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் கேட்டு விழித்தெழும்பும் சூழல் நம் நாட்டவர்க் குண்டன்றோ? இது எல்லோர்க்கும் இறையருளும், நல்வாழ்வும், நன்மையும் தரும் சிறந்த சூழ்நிலை அன்றோ !

பழங்காலத்து நாலந்தா பல்கலைக் கழகம் போல பயன்தர நம் சங்கங்கள் செயற்படின் சாலச் சிறந்ததாகும் என்பதே என் கருத்து. இசையும் நடனமும், நாடகமும், நாட்டுப் கலைகளும் சிறந்த கல்வியும், தர்மமும் வளர சங்கங்கள் உதவ வேண்டும். கிறிஸ்தவர்களின் செகண்டரி ஸ்கூல் போல் சமய பாடம் நடத்தி நம் சிறார்களுக்குச் சிறந்த மத அறிவும் வழிபாட்டு முறைகளும் கற்றுத் தர வசதி செய்தல் வேண்டும். இசை, இயல், நாடகம் நாட்டுப் புறக் கலைகள், இசைச் சொற்பொழிவுகள் எல்லாம் தெய்வ சிந்தையை வளர்க்க உதவ வேண்டும். இன்று புத்துயிர் கொடுத்து சிறந்து வளர வழி செய்ய வேண்டிய கலை ஹரி கதை. அக்கலைக்கு நல்ல கலைஞர்களைத் தயாராக்க வேண்டும். கூட்டுப் பிரார்த்தனைகளும் பஜனைகளும் பரவி வளர வேண்டும். மக்கள் ஒன்று சேரும் இடம் எல்லாம் கல்வியும் கலையும் சிறந்து வளர வேண்டும். அதற்காக நாம் சங்கங்கள் மூலம் ஆவன செய்வோம்.

அன்றாட வாழ்வில் இசை ஒரு முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆரம்பப் பள்ளி நிலையிலிருந்தே மாணவருக்கு இசையைச் சொல்லிக் கொடுப்பதற்கும், சிறந்த குடிமக்களாக, சிறந்த கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர்களாக இன்றைய மாணவர் வருங்காலத்தில் சிறந்த தலைவர்களாக வளருவதற்கும் தேவாரங்களையும் திவ்யப்பிரபந்தப் பாடல்களையும் திருவாசகத்தையும் கற்பிக்க வேண்டும். இசையை ஒரு பாடமாகப் பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும். இதற்கு அரசு ஆவன செய்தல் வேண்டும்.


*With Best Compliments*
*From*

**Priya Electronics**

*Exclusive ONIDA Dealer*

MADRAS 600 002

Tel : 844576